2006 ஜனவரி 24] [திரு. கே.பி. அன்பழகன்]

பகுதியிலே எந்தவிதமான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. மேலும் கூடுதலாக 98 மின் விளக்குகள் போடப்பட்டு அந்த நகராட்சிப் பகுதிகளிலே 56 எஸ்டேட் குடியிருப்புகளிலும் மேலும் தேவையான மின் விளக்குகள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது முதல் நூற்று முப்பத்து ஐந்தாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கையினை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

5. இடைக்கால வரவு—செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது